<u>சுருக்கம்</u>

தொழில் நல்லுறவு பரிசுக்குழு - 2017 முதல் 2020 வரையிலான ஆண்டுகளுக்கு தொழில் நல்லுறவை பேணிப்பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களை தேர்வு செய்தல் - தொழில் நல்லுறவு பரிசு திட்டக்குழு திருத்தி அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (டி2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.42

நாள்: 22.04.2022
சுபகிருது வருடம், சித்திரை – 09
திருவள்ளுவர் ஆண்டு 2053

தொழிலாளர் ஆணையர் அலுவலகம்
01563
12 MAY 2022
சென்னை-600 006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 178, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி2) துறை; நாள் 27.10.2015.
2. அரசாணை (நிலை) எண். 9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி2) துறை, நாள் 30.01.2019.
3. அரசாணை (நிலை) எண். 96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி2) துறை, நாள் 13.05.2020.
4. அரசாணை (நிலை) எண். 10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி2) துறை, நாள் 18.01.2021.
5. தொழிலாளர் ஆணையரின் கடித எண். டி2/29070/2018, நாள் 09.07.2021 மற்றும் 04.10.2021

-----

<u>ஆணை :</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009 முதல் 2014 வரை உள்ள ஆண்டுக்கான தொழில் நல்லுறவு பரிசுத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்கும், வெற்றியாளர்களை தேர்வு செய்வதற்கும் தொழில் நல்லுறவு பரிசுத் திட்டக்குழு திருத்தி அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இக்குழுவின் பதவிக்காலம் 26.10.2019 வரை நீட்டித்தும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 26.10.2020 வரை இக்குழுவினை தொடர்ந்து மேலும் ஓராண்டிற்கு நீட்டித்தும், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குழுவின் பதவிக்காலம் 26.10.2021 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பில், தொழில் நல்லுறவு பரிசுத்திட்டத்தினை செயல்படுத்திட 2017 மற்றும் 2018-ம் ஆண்டுகளுக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், தற்போது 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகள் முடிவடைந்துள்ளதால், அந்த ஆண்டுகளுக்கான விண்ணப்பங்களை பெற்று பரிசீலிக்கும் பொருட்டு, தொழில் நல்லுறவு பரிசுக்குழுவினை திருத்தி அமைத்து ஆணைகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டு,

தபி.பா

இக்குழுவினை திருத்தி அமைக்க ஏதுவாக வேலையளிப்போர் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க அமைப்புகளின் பட்டியலையும் அனுப்பியுள்ளார்.

3. தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின்னர், 2017 முதல் 2020 வரையிலான ஆண்டுகளுக்கு தொழில் நல்லுறவு பரிசுத் திட்டத்தின் கீழ் தகுதியான நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களை தேர்வு செய்யும் பொருட்டு தொழில் நல்லுறவு பரிசுக் குழுவானது கீழ்க்கண்டவாறு திருத்தி அமைத்து அரசு ஆணையிடுகிறது.

**தலைவர்:** ஓய்வுபெற்ற மாண்புமிகு திரு.நீதிபதி S. மாரிமுத்து.
**செயலாளர்:** தொழிலாளர் தனி இணை ஆணையர்.
உறுப்பினர்கள்:
வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள்:
கீழ்க்கண்ட சங்கங்களிடமிருந்து (தலா ஒரு பிரதிநிதி)

| வ.எண். | வேலையளிப்போர் அமைப்புகளின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு தோட்டத் தொழிலதிபர் சங்கம் (PAT) |
| 2. | தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (SIMA) |
| 3. | அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் |
| 4. | தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கம் (SIEMA) |

தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள்:
கீழ்க்கண்ட சங்கங்களிடமிருந்து (தலா ஒரு பிரதிநிதி)

| வ.எண். | தொழிற்சங்க அமைப்புகளின் பெயர் |
|---|---|
| 1. | தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை (LPF) |
| 2. | அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) |
| 3. | இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC) |
| 4. | இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU) |

4. தொழில் நல்லுறவு பரிசு திட்டக்குழுவின் உறுப்பினர்களுக்கான பயணப்படி மற்றும் தினசரிப்படி ஆகியவற்றின் நோக்கத்திற்காக இக்குழு முதல் தரக் குழுவாகக் கருதப்படும்.

5. தொழில் நல்லுறவு பரிசு திட்டக்குழுவின் தலைவர் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு இருக்கும்.

த.பி.யா

6. இக்குழுவிற்கான செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2230 தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறை – 01 தொழிலாளர் – 001 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் – மாநில செலவினங்கள் ஏஏ. தலைமையிட பணியாளர்கள் – தொழிலாளர் ஆணையர் – 304, பயணச் செலவினம் – 01 சுற்றுப் பயணப் படிகள்.
(த.தொ.கு. "2230-01-001-AA-30401".)

7. இக்குழுவின் செயலாளராக இருக்கும் தொழிலாளர் தனி இணை ஆணையர், இக்குழுவின் உறுப்பினர்களின் பயணப்படிகளுக்கான பட்டியலில் மேலொப்பமிட அதிகாரம் பெற்றவராவார்.

8. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள நிர்வாக அலுவலர் (குறைந்தபட்ச ஊதியம்), தொகையை பெற்று வழங்குவதற்கு அதிகாரம் பெற்றவராவார்.

9. இவ்வாணைக்கு, அரசாணை (நிலை) எண்.1177, நிதித்துறை, நாள்.09.09.1988-ன்படி நிதித்துறையின் ஒப்புதல் தேவையில்லை.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா.கிர்லோஷ் குமார்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்:-
தொழிலாளர் ஆணையர், சென்னை-600 006.
மாண்புமிகு திரு. நீதிபதி S. மாரிமுத்து (ஓய்வு)
இந்திரா மாரிமுத்து இல்லம், பிளாட் எண்.43,44,
திருக்குறள் தெரு, காமாட்சி நகர், வளசரவாக்கம்,
சென்னை-600 087.
தமிழ்நாடு தோட்டத் தொழிலதிபர் சங்கம் (PAT)
தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் (SIMA)
அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம்
தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கம் (SIEMA)
தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை (LPF)
அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC)
இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU)
} தொழிலாளர் ஆணையர் வழியாக
நகல்:
மாநிலக் கணக்காயர், சென்னை-600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை-600 018. (பெயரிட்ட உறையில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை-600 009.
சம்பளக் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 035.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-600 009.

கூடுதல் செயலரின் நேர்முக உதவியாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்,
(அ.நமு.II-2)துறை, சென்னை-600 009. (2நகல்கள்)
சுத்த நகல் / இருப்பு கோப்பு (கோ.எண்.11442/டி.2/2020)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

மா. பரிமளா
25/4/2022

**பிரிவு அலுவலர்.**

25/04/2022